# கம்பம் நகராட்சி

2021–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (30.09.2021) ஆம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு, கம்பம் நகர்மன்ற கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

## கூட்டப்பொருட்கள்

**1.** நகராட்சி ஆணையாளர் அவர்களின் 09/2021–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

**2.** நகராட்சி பொறியாளர் அவர்களின் 09/2021 –ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

**3.** 2021–2022– ஆம் ஆண்டிற்கு கம்பம் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், நகராட்சி மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர்கள், நகர சுகாதார செவிலியர்கள், தூய்மை பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு சீருடைகள், தலைப்பாகைத் துணி , காலணிகள் மற்றும் தையற்கூலி ஆகியவை வழங்குவதற்கு ஆகும் உத்தே செலவுத் தொகை ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) இலட்சத்திறகு மனறத்தின் அனுமதி வேண்டபபடுகிறது.

**அலுவலகக் குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3098/2020/எச்1)

**4.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 2291 நாள் 30.06.2021 தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு, ரூ.600000/– மதிப்பீட்டில், இந்நகராட்சியால் பாராமரிக்கப்பட்டு வரும் வார்டு எண்.1 சுவாமி விவேகானந்தர் தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி படிக்கட்டுகள் சேதமடைந்துள்ளதால் புதிதாக (Spriral Stair case) படிக்கட்டுகள் அமைக்கவும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட 22.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசிலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி விவரம் | மதிப்பீட்டு விட | |
|---|---|---|---|
| | | சதவிகிதம் குறைவு | சதவிகிதம் கூடுதல் |
| 1. | A.P. Constructions | 0.14 | – |
| 2. | ஆர். சபிர்அலி | – | 1.86 |

**அலுவலகக் குறிப்பு–** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.14 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள A.P. Constructions, கம்பம் என்பவரது ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**5.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 22 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு 107 பணியாளர்களை வழங்கி வரும் M/s UK security Service, Chennai என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். 3767/2019/ எச்1 நாள் 29.05.2020 –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.06.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s UK security Service, Chennai நிறுவனத்துடன் 30.09.2021 முடிய ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு 31.10.2021 வரை வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ15.00இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s UK security Service,Chennai நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.10.2021 முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3787/2019/எச்1)

| | |
|---|---|
| **6.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **11** வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு **76** பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். **4468/2018/** எச்**1** நாள் **27.02.2020** –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு **29.02.2020** முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த **28.02.2021** உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற கருத்துரு அனுப்பப்பட்டு இதுவரை அனுமதி வழங்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததாலும், கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமலில் இருந்ததாலும், ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் **30.09.2021** முடிய ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு **31.10.2021** வரை வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ**10.00** இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு:-</u>** நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை **01.10.2021** முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.4468/2019/எச்1)** |
| **7.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **33** வார்டுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கும் பணிக்கு **63** பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். **3963/2018/**எச்**1** நாள்.**27.02.2020** –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு **29.02.2020** முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த **28.02.2021** உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் **30.09.2021** முடிய ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு **(31.10.2021** வரை **)** வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ.**6.00** இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு:-</u>** நிர்வாக நலன் கருதியும் சுகாதார நலன் கருதியும் பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை **01.10.2021** முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.3963/2019/எச்1)** |
| **8.** | கம்பம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு **2020–2021**–ஆம் ஆண்டிற்கு திரு.எம்.ஏ.பாஸ்கரன் என்பவர் ரூ.**17,65,654/–** க்கு ஏலம் எடுத்து உரிமம் பெற்றிருந்தார். கொரோனா பரவல் காரணமாக **25.03.2020** முதல் |

| | |
|---|---|
| | கட்டண கழிப்பறை அடைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. இந்நிலையில் திரு.எம்.ஏ.பாஸ்கரன் என்பவர் பேருந்து வரத்து குறைவு மற்றும் அண்டை மாநிலமான கேரள எல்லை மூடப்பட்டது காரணமாகவும் என்னால் குத்தகை நடத்த இயலாதென விண்ணப்பம் செய்ததின் அடிப்படையில், அன்னாரின் குத்தகை உரிமத்தினை இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.3207/2020/பி2 நாள்.24.12.2020 மூலம் ரத்து செய்து 01.01.2021 முதல் துறை ரீதியாக வசூலிக்கப்பட்டது. எனவே ஏல பொறுப்புத்தொகை ரூ.17,65,654–இல் ஏப்ரல்–2020 மற்றும் மே–2020 ஆகிய இரு மாதங்களுக்கு கேட்பு தொகை ரூ.2,94,276/–ஐ வஜா செய்தது போக மீதம் கேட்பு ரூ.14,71,378/–ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3294/2020/சி2) |
| 9. | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 AV 2490 க்கு 28.08.2021 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் மற்றும் தகுதி சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.108000 /– (ரூபாய் ஒரு இலட்சத்தி எட்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார பணிகள் என்பதால் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1942/21 /எச்1) |
| 10. | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 AV 2482 க்கு 28.08.2021 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் மற்றும் தகுதி சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ 108000 /– (ரூபாய் ஒரு இலட்சத்தி எட்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார பணிகள் என்பதால் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1946–1 / 2021 / எச்1) |
| 11 | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 AV 2496 TATA ACE க்கு 28.08.2021 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் மற்றும் தகுதி சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ 108000 /– (ரூபாய் ஒரு இலட்சத்தி எட்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு.** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார பணிகள் என்பதால் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1946–2 / 2021 / எச்1) |
| 12. | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் எண் TN 60 T 4507 க்கு மராமத்து பணிகள் செய்து தர உத்தேச செலவினம் ரூ 98000 /– (ரூபாய் தொண்ணுாற்றி எட்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு.** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார பணிகள் என்பதால் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1941 /21 / எச்1) |

| | |
|---|---|
| **13.** | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.16341/2021/இ3 நாள்.**26.08.2021**ல் அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, கம்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள சாலைகள், மழைநீர் வடிகால் உள்ளிட்ட விவரங்கள் மற்றும் **33** வார்டுகளில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள், தெருவிளக்குகள், சிறுபாலங்கள், நடைபாதைகள், கழிவறைகள் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய பதிவேடு மற்றும் வரைபட தயார் செய்யும் பணியினை தனியார் நிறுவனத்தின் (Consultant) மூலம் மேற்கொள்ளவும் அதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ. **7.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>:** மன்றம் அனுமதிக்கலாம். <u>(ந.க.எண்.**2094/2021/இ1**)</u> |
| **14.** | இந்நகராட்சிக்கு சொந்தமான கம்பம் மெட்டு சாலையில் உள்ள கணினி வரிவசூல் மையமானது முற்றிலும் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாலும், வார்டு எண். 1 முதல் 15 வரையிலான பகுதி மக்கள் வரிவசூல் இரசீதுகள் செலுத்திட பிரதான மையமாக இருப்பதால் இதனை உடனடியாக பழுது மற்றும் மராமத்து பணிகள் செய்வது அவசியமாகின்றது. அதன்பேரில் இப்பணிகள் செய்திட தயார் செய்யப்பட்ட திட்டமதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>: 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** மேற்படி பணிகளுக்கான செலவினத்தினை **2021–22** ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**2094/2021/இ1**) |

**ஒப்பம்/– திரு. மெ. சரவணகுமார்**

**நாள். 29.09.2021** **ஆணையாளர்,**

**இடம். கம்பம் நகராட்சி**

**கம்பம் நகராட்சி.**